AstroVed

மாலை: 1


# சத்வித்யா

மலர்: 10

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

மாதம் இரு முறை வெளிவரும்
ஜனவரி 15முதல் 31வரை

ஆன்மீக விஞ்ஞான இதழ்



# குழந்தை வரம் அருளும் கோயில்

- ★ பிறந்த நேரம் சரி செய்தல்
- ★ கொம்புசாமி சித்தர்
- ★ மூலிகை ரகசியம்
- ★ ஜனவரி மாத ராசிபலன்கள்

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்
மேலும் விபரங்களுக்கு போன்: 95660 00134, www.astroved.com

# சத்வித்யா



நம் இந்தியத்திருநாட்டில் "இல்லாதவர்கள் எனப்படுகின்ற ஏழைகள் அதிகம் உள்ளனர். இந்த நிலையை மாற்றவே ஒரு மந்திரத்தை விஸ்வாமித்திரர் அருளியிருக்கிறார். மன்னனாய் இருந்து ரிஷியாய் மாறிய விஸ்வாமித்திரர் மக்களின் வறுமையைப் போக்கும் ஓர் எளிய மந்திரத்தை எமக்கு அருளினார். அதுவே ஸ்ரீம் பிரிஸி Shreem Brzee என்னும் மந்திரம். இந்த மந்திரத்தை தொடர்ந்து உச்சரிப்பதன் மூலம் தரித்திரம் நீங்கி, செல்வ வளம் பெருகும்.

~ Dr. Baskaran Pillai

பெருமைமிகு சத்வித்யா நேயர்களே தைப்பெண் பிறந்துள்ள இப்பெருமை மிகு தருணத்தில் இதழுக்கு ஆதரவு நல்கும் வாசகர்கள் அனைவர்க்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.




2020ம் ஆண்டு உலகையே துன்பத்தில் ஆழ்த்தித்தியபோதும் புண்ணிய பூமியான நம் இந்திய மண்ணில், மகான்களின் ஆசியாலும் இறைவனின் கருணையாலும் பாதிப்புகள் குறைவுதான். இவையெல்லாம் நம்மக்களின் ஆன்மிக சிந்தனை மற்றும் வழிபாடுகளுக்குக் கிடைத்த வெற்றி என்றே சொல்லலாம்.

தை பிறந்து விட்டது. கொடிய நோய்கள் விலகி ஓட வழியும் பிறந்துவிட்டது, இனிவரும் காலங்களில் இன்பங்கள் மட்டுமே மலரட்டும் மனிதநேயம் வளரட்டும், நெறிதவறா ஆன்மீக சிந்தனை செழிக்கட்டும்.

சத்வித்யா
வாழ்த்துகின்றது

(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

# சித்தர் பூமி

# கொம்புசாமி சித்தர்

நமது சத்வித்யா இதழின் சித்தர் பூமி பகுதியில் இந்த இதழில் நாம் பார்க்கவிருப்பது கொம்புசாமி சித்தர் ஜீவசமாதி.

கிழக்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் அமைந்துள்ள ராஜபாளையம் நகரத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ளது இந்த ஜீவசமாதி ஆலயம்.



இன்றளவும் ஆயிரக்கணக்கான பக்தர்களை வழிவழியாய்க் கொண்டுள்ள இந்த கொம்புசாமி சித்தர் யார்? இவர் எந்தக் காலத்தில் வாழ்ந்தவர்? இவர் செய்த அருஞ்செயல்கள் என்ன? என்பதை இப்போது காணலாம்.

கொம்புசாமி சித்தர் பிறந்தது எந்த ஊர் என்ற விபரம் யாருக்கும் தெரியவில்லை. அவர் எங்கிருந்து வந்தார் என்பதையும் யாரும் அறியவில்லை.

இவரது காலம் என்பது ஆங்கிலேயர் வருகைக்கு சற்றே முற்பட்டது என்று மட்டும் அறிய முடிகிறது.

இவருடைய இந்த ஜீவசமாதி என்பது இன்று ஒரு சிவாலயம் போலவே காட்சி தருவது மிகுந்த ஆச்சர்யத்தைத் தருவதாய் உள்ளது. விநாயகர், முருகன் சன்னதிகள் அடங்கிய விஸ்தாரமான திருக்கோபிலாய் காட்சியளிக்கிறது இந்த ஜீவசமாதி ஆலயம். இங்கு கருவறை நோக்கி அமைக்கப்பட்டுள்ள நந்தியம் பெருமானின் திருவுருவம் பற்பல சிறப்புகளைப் பெற்றுள்ளது.

கருவறையில் இரண்டு சிவலிங்கள்கள் அமைந்துள்ளது. காரணம் இது கொம்புசாமி சித்தரின் ஜீவசமாதி ஆயினும் இவருக்கு அருகிலேயே வெள்ளியங்கிரி சுவாமியின் ஜீவசமாதி அமைந்துள்ளது தனிச்சிறப்பு.

கொம்புசாமி சித்தரின் இயற்பெயரை யாரும் அறிந்திருக்கவில்லை சரி கொம்புசாமி என்னும் பெயர் எப்படி வந்தது? என்பதனை பார்ப்போம்.

சுமார் 400, 500 ஆண்டுகளுக்கு முன்னால் இப்பகுதியானது மலையும் புதர்களும் நிறைந்த பகுதியாக

இருந்தது. குறுநில மன்னர்கள் மற்றும் ஜமீன்தார்கள் ஆட்சி அதிகாரத்தில் இருந்த நேரமது.

பிழைப்புக்கு வழியில்லாதோர் பலர் பல குழுக்களாக கள்வர்களாக இருந்து மக்களை அச்சுறுத்தி, கொள்ளையடித்து மக்களின் உடைமைகளைக் கவர்ந்து வாழ்ந்தனர்.

இந்தப் பகுதியில் அப்படி, திருடர்கள் அடிக்கடி வருவதும் பொருட்கள் மற்றும் ஆடு, மாடுகளை கொள்ளையிட்டு செல்வதுமாக இருந்தனர். மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி நிம்மதி இழந்தனர்.

இந்த தருணத்தில் தான் ஒரு பாமர மனிதனாய் இங்கு வந்துள்ளார். சித்தர் மக்கள் அனைவரும் திருடர்கள் பற்றிய தங்கள் வேதனையை அவரிடம் சொல்லி ஆதங்கப்பட்டனர்.

மக்களின் துயரத்தைத் தீர்ப்பதற்காக கொம்பு போன்ற ஒரு வாத்தியத்தை தயார் செய்தார், சித்தர் தன் ஞான திருஷ்டியால் திருடர்கள் வரப்போவதை உணர்ந்து, அந்த கொம்பை வைத்து ஊதுவார்.

கொம்பின் முழக்கத்தைக் கேட்ட மக்கள் அனைவரும் தங்கள் உடைமைகளை பத்திரப் படுத்திவிட்டு, மலைப்பகுதியில் சென்று மறைந்து கொள்வார்கள், திருடர்கள் வந்து பார்த்து, எதுவும் கிடைக்காத விரக்தியில் குடிசைகளை தீயிட்டுக் கொளுத்தி விட்டு சென்று விடுவார்கள். இவ்வண்ணமே மக்களுடைய உடைமைகளைக் காப்பாற்றி, எல்லோரும் நல்வாழ்வு வாழ உதவிய சித்தரை மக்கள் அனைவரும் கொம்புசாமி சித்தர் என்றே அழைக்கத் தொடங்கினார்கள்.

மின்சார விளக்குகள் இல்லாத அந்த காலத்தில் கொம்புசாமி சித்தருக்கு சமையல் செய்ய ஒரு மூதாட்டி உதவுவாராம். இவர் எதையோ அரிந்து கொடுத்து குழம்பு வைக்க சொல்வாராம். பின்பு வழிபட்டு விட்டு கொம்புசாமி சித்தர், தன் தவ வலிமையால் அந்த மூதாட்டியைப் பிழைக்க வைத்துள்ளார்.

இந்த சம்பவத்தின் மூலம் தான், சித்தர் தினமும் பாம்பைப் பிடித்து அரிந்து கொடுத்து குழம்பு வைக்கச்சொன்னார் என்பது தெரிய வந்துள்ளது, பாம்பின் விஷம் மகானை ஒன்றும் செய்யவில்லை,ஆனால் சாதாரண மனித உடலை சாவின் விளிம்பிற்குக் கொண்டுபோய் விட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட மகான், தான் ஜீவசமாதி அடையும் நேரம் நெருங்கிவிட்டதாக சொல்ல, மக்கள் அனைவரும் இனி தங்களை யார் காப்பாற்றுவது என எண்ணி கதறிப் புலம்பியுள்ளனர்.

அப்போது, நம் கொம்புசாமி சித்தர், கவலைப்பட வேண்டாம், இன்னும் சிறிது காலம் தான், இங்கே வெள்ளையர்கள் அதிகாரம் செலுத்த வரப்போகிறார்கள் அவர்கள் கொள்ளையர்களை கட்டுக்குள் கொண்டு வந்து உங்களைக் காப்பார்கள் என்று தனது

அடுத்த இதழில் தொடரும்.....

~ ரா. பன்னீர்செல்வம்

# குழந்தை வரம் அருளும் கோயில்

நெய்தல் நிலமும் மருத நிலமும் சங்கமிக்கும் ஊர் கடலூர், கடல் அலைகள் தாலாட்டும் கடலூர்துறைமுக நகரில் திரும்பிய திசைகள் எல்லாம் அருள்மணம் கமழும் திருக்கோயில்கள்..

கடலூர் புதுநகரிலிருந்து தெற்கே கடலூரிலிருந்து (சிதம்பரம் செல்லும் சாலையில்) 4 கிலோ மீட்டர் தொலைவில் "அருள்மிகு ஐந்து கிணற்று மாரியம்மன்" என்ற பிரசித்த பெற்ற அம்மன் அருளாலயம் ஒன்று உள்ளது.



பன்னெடுங்காலத்திற்கு முன்பே அருள்மிகு ஐந்து கிணற்று மாரியம்மன் திருத்தலம் எழிலுற அமைந்துள்ளது.

இராஜ கம்பீரத்தோடு அமைந்த இராஜ கோபுரம். அருள்தரும் நெடிதுயர்ந்த கொடி மரம், அழகு மிகு பிரகாரம் வலது பக்கம் ஸ்ரீ விநாயகர் சந்நிதி இடது பக்கம் ஸ்ரீ முருகப்பெருமான் சந்நிதி நடுவில் அருள்மிகு ஐந்து கிணற்று மாரியம்மன் பரிவும் கனிவு கொண்டு அலை அலையாய் வரும் அடியவர்களுக்காக அருளும் பொருட்டு இனிதே வீற்றிருக்கின்றாள்.

பெயர்க்காரணம்
கோயில் பிரகாரத்தில் நான்கு கிணறுகள் சுற்றி அமைந்துள்ளது நடுவில் மூலஸ்தானத்தில் கிணறு அமைந்துள்ளது. நடுவில் உள்ள கிணற்றை மூடி, அதன் மீது அம்பிகை எழுந்தருளுகிற எழில் நலத்தை கொண்டிருக்கிறாள் அதனால்தான் இத்தாயின் திருக்கோயிலுக்கு அருள்மிகு ஐந்து கிணற்று மாரியம்மன் திருக்கோயில் என்று திருப்பெயர் அமைந்து சிறப்பு பெற்றிருக்கிறது.

குழந்தை வரம் அருள்பவள்
திருமணம் ஆகி குழந்தை பேறு தள்ளிப் போய் வருந்துவோரும் உண்டு. அத்தகைய பக்தர்கள் இத்தலத்திற்கு வந்து பக்தி சிரத்தையோடு தொட்டில் கட்டி வழிபட்டால் குழந்தை பாக்கியம் உடன் பெறலாம்.

தீராத நோய்களும் தீரும் அதிசயம்.

ஆடி மாதத்தில் இத்தலத்தில் செடல் உற்சவம் வெகு விமர்சையாக நடைபெறும் லட்சக்கணக்கான மக்கள் கூடுவார்கள் பத்துநாட்கள் நடைபெறும் பிரமோற்சவத்தில் தினமும் சுவாமி வீதியுலா -புஷ்ப பல்லக்கு பரிவேட்டை. தெப்பல் உற்சவம், திருத்தேர் என ஊரே களைகட்டும். இத்தருணத்தில் தீராத நோய் நீங்கி செடல் போட்டு நேர்த்தி கடன் செலுத்துவோர் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பயபக்தியுடன் வழிபட்டு செல்வதை காணலாம். என்ன வேண்டினாலும் அதை உடனே நிறை வெற்றி தருபவள் இத்தலத்தாய். ஆயிரங்கோடி பவுர்ணமியை நிகர்த்த அம்மனின் அருள் முகம்.

சுற்றுப்பிரகாரத்தில் அருள்மிகு ஐயப்ப சுவாமி திருக்கோயில் மிக கம்பீரமாகவும் அருளும் அழகும் மிக்க ஆலயம் அமைந்து உள்ளது. நாகராஜனுக்கு சந்நிதியும் அமைந்துள்ளது.

திருமணத்தடை இல்லற வாழ்வில் இடையூறுஏற்பட்டு பிரிந்தவர்கள் பட்டம் பதவி இழந்தவர்கள் தோல்விகள் துன்பங்கள் தொடர்ந்து சிரமப்படுகிறவர்கள் மனமுருக வழிபட்டால் நல்ல நிலையை அடையலாம்.

இராஜயோகம் பட்டம் பதவிபுகழ் பொருள் நீண்ட ஆயுள் தீர்க்க சுமங்கலிகளாக நூறாண்டு வாழ்வும். மகிழ்ச்சியான மண வாழ்க்கை கிடைக்க இக் கோயிலில் விளக்கேற்றி வழிபடலாம்.

இத்தல பிரகார சுவரில் மிகப்பெரிய அளவில் கருங்கல்லில் இத்தல அம்பிகையைப் போற்றி அருள்மிகு ஐந்து கிணற்று மாரியம்மன் பாமாலையை செதுக்கி வைத்துள்ளார்கள் கோயிலுக்கு வருகிற பக்தர்கள் இப்பாமாலையை பக்தி பரவசத்துடன் பாடி வழிபடுவது உண்டு.

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்



VOPEC
TURMERIC & BLACK PEPPER
HI-HEALTH FORMULA
Navel Chakra & Detoxifier
Hi –health formula can be a solution for everyday health issues
Turmeric fights with free radicals & protects brain,
heart and liver cells from ageing process
call: 95660 00134

# சாளக்ராம மகிமை !

வைதீகமான குடும்பங்களில் தொன்றுதொட்டு பூஜிக்கப்பட்டும் மிகவும் உயர்ந்ததாகக் கருதப்பட்டும் வருவது சாளக்ராமம். இது உருளைவடிவமாயும், மிகவும் மிருதுவாயும், கரிய நிறமாயும் அல்லது சிவப்பு நிறமுடையதாயும் இருக்கும். இதை மிக பத்திரமாய் பூஜை பெட்டியில் வைத்திருப்பார்கள்.
தலைமுறை, தலைமுறையாக வழி, வழியாக குடும்பத்தில் ஒருவர் பின் ஒருவராக இதனை பெற்று ஆராதித்து வருகிறார்கள் என்பதே இது எவ்வளவு புனிதமானது, மதிப்பிற்குரிய பொக்கிஷமாக உள்ளது என்பதை விளக்கும்.



இது கன்னிகாதானத்தின் போது, கன்னிகையுடன் வரனுக்கு தானம் செய்யப்படுவதும் உண்டு. சாளக்ராமசிலா என்பது விஷ்ணு அம்சம் உடையது. இதனுடைய மந்திரத்திற்கு ரிஷி ஸ்ரீபகவான். தேவதை நாராயணன். சாளக்ராமம் நேபாளத்திலுள்ள கண்டகி நதியில் கிடைக்கக்கூடிய ஒருவிதமான கல். பவிஷ்யோத்தர புராணம் கூறுவது கண்டகி நதிக்கு வடக்கிலும் ஹிமாசலத்திற்கு தெற்கிலும் பத்து யோஜனை விஸ்தீர்ணமுள்ள சாளக்ராமம் என்ற புண்ணிய பூமியுள்ளது. இங்கு துவாரவதி சாளக்ராமத்தில் ஒன்று கூடுகிறது.

மோட்சத்தைக் கொடுக்கக்கூடிய ஸ்தலம் இது என்பதில் சந்தேகமே கிடையாது. முக்திபதி அல்லது முக்திக்ஷேத்ரம் என்று சொல்லப்படுவது காட்மாண்டுவிலிருந்து 140 மைல் தொலைவில் இருக்கிறது. இதையே சாளக்ராம க்ஷேத்ரம் என்றும் கூறுவர். சாளக்ராமத்தைப் பற்றிய ஒரு கதை பின்வருமாறு: பிரம்மனது வியர்வைத் துளியினின்று கண்டகி என்ற ஒரு பெண் உருவெடுத்தாள். அவள் கடுந்தவம் புரிந்தமையால் அச்சுற்ற தேவர்கள் அவளை நாடி வரமளிக்க வந்தனர்.
அவளோ அவர்களை தன் பிள்ளைகளாகப் பெற விரும்பினாள். இது முடியாது என்பதால் தேவர்களை பூமியில் புழுக்களாகும் படி சபித்தாள். கோபமடைந்த தேவர்கள் அவளை ஒரு ஜடமாக ஆக சபித்தனர்.

இதனால் கலங்கிய பிரம்மா இந்திரனையும், ருத்ரனையும் அணுகி அவர்களது பரிஹாரம் கிட்டமுடியாமல், விஷ்ணுவை அண்டினார். இரு சாபங்களையும் அகற்ற இயலாது என்று கூறி விஷ்ணு ஒரு உபாயம் கூறினார்.

சாளக்ராம க்ஷேத்ரத்தில் சக்ர தீர்த்தத்தில் தான் வாசம் செய்வது என்றும் அங்கு தேவர்கள் வஜ்ர கீடம் என்ற புழுக்களாகி அங்குள்ள கூழாங்கற்களை ஆகாரமாகக் கொண்டு வாழவேண்டியது என்றும் கண்டகி என்பவள் ஒரு நதி வடிவமாக அந்த கற்களில் பாயவேண்டும் என்றும் ஏற்பாடாகியது.

அத்தகைய தேவாம்சமும், விஷ்ணு அம்சமும் பொருந்தியவை சாளக்ராம கற்கள்.

பத்ரிநாத்திலுள்ள பிம்பங்கள் சாளக்ராமத்தினால் ஆனவை. சாளக்ராமத்தை கோர்த்து மாலையாகவும் பிம்பங்களுக்கு அணிவிக்கலாம். சாளக்ராம் உடைந்திருந்தாலும், ஸ்வரூப அழிவுற்று இருந்தாலும், அக்னியில் எரிந்திருந்தாலும், அதற்கு ஒரு தோஷமும் இல்லை. அது குற்றமற்றது.

சாளக்ராம பூஜை செய்ய மந்திரமோ, தந்திரமோ, புனித தீர்த்தமோ வேறு பூஜா விவரணங்களோ தேவையில்லை. அது இருந்தாலே சந்துஷ்டியை கொடுக்கவல்லது. சாதாரணமாக புருஷ சூக்த மந்திரத்தால் பூஜிப்பார்கள். அது சிரார்த்த காலங்களில் இருக்க வைப்பது பிதுர்களுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும். சாளக்ராம அபிஷேகதீர்த்தத்தை சிரஸில் தெளித்துக் கொண்டு அதை அர்சித்த துளசியை தரித்துக் கொண்டு, அதற்கு நிவேதனம் செய்த உணவை உண்ண வேணும்.

இது வைகுண்ட வாசத்தைக் கொடுக்க வல்லது. சாளக்ராம அபிஷேக ஜலத்தை கீழே கொட்டக்கூடாது.



இக்கற்களில் இயற்கையாகவே திருமாலின் சங்கு, சக்கரம், கதை, தாமரை போன்ற உருவங்கள் காணப்படுகின்றன. இவை நெடுங்காலமாக கோவில்கள், மடங்கள், வீடுகளில் வைக்கப்பட்டு வழிபடப்படுகிறது. பலவித வடிவங்களில் உள்ள சாளக்கிராமங்கள் அவற்றில் பதிந்துள்ள உருவம், அமைப்பு இவற்றிற்கேற்ப திருமாலின் பல அவதாரங்களாக பெயரிடப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக சங்கு, சக்கரம், கதை, தாமரை ஆகியவை ஓர் குறிப்பிட்ட அமைப்பில் உள்ள கற்கள் கேசவம் என அழைக்கப்படுகின்றன. இவ்வாறாக கேசவம், மாதவம், நாராயணம், கோவிந்தம், விஷ்ணு, மதுசூதனம், திரிவிக்கிரமம், வாமனம், சிறீதரம், இரிசிகேசம், பத்மநாபம், தமோதரம், சங்கர்சனம், பிரத்யும்னம், நரசிம்மம், சனார்த்தனம், அரி, கிருஷ்ணம், சந்தான கோபாலன், லட்சுமி நாராயணன், வராகமூர்த்தி, மத்ஸ்யமூர்த்தி, கூர்மம், சுதர்சனம், ஹிரண்ய கர்ப்பம் என்று 68 வகை சாளக்கிராமங்கள் உள்ளதாக பண்டைய நூல்கள் தெரிவிக்கின்றன.

பண்டைய காலத்தில், மன்னர்களின் சபைகள், ஊர் சபைகள் ஆகியவற்றில் வழக்குகளில் சாட்சி சொல்லும் போது சாளக்கிராமத்தைக் கையில் கொடுத்து சாளக்கிராம சாட்சியா சாட்சி சொல்லும் வழக்கம் இருந்தது.

மரண காலத்தில் சுயநினைவுடன் சாளக்கிராமத்தை மனதால் வணங்குபவன் பாவங்களில் இருந்து

விடுபடுகிறான் என்றும், இறக்கும் போது சாளக்கிராம தீர்த்தத்தின் ஒரு துளி தீர்த்தத்தை அருந்தி உடலை விடுவோர் வைவஸ்வதம் என்ற தர்மராஜரின் நகரில் யமதர்மராஜனால் மரியாதை செய்யப்பட்டு புண்ணிய உலகிற்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

கண்டகி என்னும் புண்ணிய ஆற்றில் நீராடி முக்தி நாதனை பக்தியுடன் வழிபடுபவன், பூவுலகில் சுகமாக வாழ்ந்து பின்னர் வைகுண்டத்தில் தன்னுடன் இருப்பதாக விஷ்ணு கூறுவதாகக் கூறப்பட்டுள்ளது.

சாளக்கிராமம் உள்ள வீடு வைகுண்டத்திற்கு சமம் என்று பத்மபுராணம் கூறுகிறது.

சாளக்கிராம திருமஞ்சன தீர்த்தம் கங்கா தீர்த்தத்தைவிட உயர்ந்தது என்று ஸ்ரீ சாளக்கிராம தத்துவ முக்தாவளி எனும் நூல் கூறுகின்றது.

ஸ்ரீதேவி பாகவதமும் ஸ்ரீநரசிம்ம புராணமும் சாளக்கிராம வழிபாட்டினை புகழ்கின்றன.

சாளக்கிராமத்தை துவாரகா சிலாவுடன் சேர்த்து வணங்குவது சிறப்பானது என்று கூறுவர்.

ஸ்ரீ ஸாலக்ராம மந்த்ர:

"ஓம் நமோ பகவதே விஷ்ணவே ஸ்ரீ ஸாலக்ராம நிவாஸினே ஸகல துரித நிவாரிணே, ஸர்வா பீஷ்ட பல ப்ரதாய ஸாலக்ராமாய ஸ்வாஹா"

"ஓம் விஷமன் நாஸாய வித்மஹே,
விஷ்ணு வாஸாய தீமஹி,
தந்நோ சிலா: ப்ரசோதயாத்"

~ முகநூல் பதிவு



KABA SURA KUDINEER
15 herbs effective against Viral infections, fever, cough and breathing difficulties
Call: 95660 00134

# தைப்பூசம்

யாமிருக்க பயமேன் என்பது முருகப் பெருமானின் அருள்வாக்கு. எளியோரைக் காக்கும் இறைவனாக முருகன் அறியப்படுகிறார். குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம் என குன்றுகள் தோறும் கோயில்களைக் கொண்டுள்ளார். அறுபடை வீடுகளில் ஆட்சி செய்யும் தமிழ் கடவுளான முருகப்பெருமானின் திருவிழாக்களில் முக்கியமானது தைப்பூசம் ஆகும். தை மாதத்தில் பூச நட்சத்திரத்தன்று பௌர்ணமி தினத்தையொட்டி தைப்பூசம் கொண்டாடப்படுகின்றது. அன்று ஆறுபடை வீடுகள் உள்ளிட்ட அனைத்து முருகன் மற்றும் சிவாலயங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.



## தைப்பூச வரலாறு

தேவ்ரக்ளுக்கும் அசுரர்களுக்கும் இடையே மூண்ட போரில், அசுரர்களை அழிக்க முடியாமல் திணறிய தேவர்கள் சிவபெருமானின் அருளை நாடினர். முக்கண் நாயகனை நேரில் சந்தித்து தேவர்கள் முறையிட்டதால், எம்பெருமான் தனது மாபெரும் சக்தியால் நெற்றிக்கண்ணில் இருந்து வெளியான 6 தீப்பொறிகள் 6 அழகான குழந்தைகளாயின. அதுவே முருகன் அவதாரம் ஆகும்..

கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்ட 6 குழந்தைகளும் ஆறுமுகத்துடன் முருகனாக அவதரித்தார். சிவனில் பாதியான சக்தியுடையாள், ஆண்டி கோலத்தில் பழனி மலையில் குடியேறிய முருகபெருமானுக்கு ஞானவேலை தந்தருளியது "தைப்பூச" தினத்தன்று என்று கூறப்படுகிறது.

## தைப்பூச விரத முறைகள்


தைப்பூசம் நாளில் காலையில் எழுந்ததும், வீட்டை சுத்தம் செய்து குளித்துவிட்டு, நெற்றி நிறைய திருநீறு அணிந்து, விரதத்தை தொடங்கலாம். வீட்டில் விளக்கேற்றி தெய்வங்களை வழிபட்டு, குறிப்பாக முருகப்பெருமானை வழிபட்டு, கந்த கந்த சஷ்டி கவசம், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருமுருகாற்றுப்படை, திருப்புகழ், கந்தர், கலிவெண்பா உள்ளிட்ட முருகப்பெருமானுக்கு உகந்த பாடல்களை காலையிலிருந்து மாலை வரை படிக்கலாம். தைப்பூசத்தை முன்னிட்டு முருக பக்தர்கள், முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளுக்கும் பாதயாத்திரையாகச் சென்று, காவடி நேர்த்திக்கடன் செலுத்துவதை பக்தர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

யாவர்க்கும் வலியன் நீ, யாவர்க்கும் எளியன் நீ, யாவர்க்கும் ஆனோய் நீ என்பதற்கு ஏற்ப, முருகப்பெருமான், மனிதர்கள், தேவர்கள், கடவுள்கள் என அனைவரையும் காட்டிலும் வலிமையானவன், அனைவரையும் காட்டிலும் எளிமையானவன். அதனால் தான் சிறுவர் முதல் பெரியவர்கள் வரையில் அனைவருக்கும் மிகவும் பிடித்தமான கடவுளாக முருகப்பெருமான் உள்ளார். இந்த தத்துவத்தை உணர்த்தவே, அறுபடை வீடுகளிலும் ஆறு கோலத்தில் காட்சி கொடுத்து அருள்பாலிக்கிறார்.

~ திருமதி ஜானகி ராகவன்

# கும்பகோணம் திருக்கோயில்கள் கரு முதல் சதாபிஷேகம் வரை

1. கரு உருவாக (புத்திர பாக்கியம்) - கருவளர்-ச்சேரி
2. கரு பாதுகாத்து சுக பிரசவம் பெற - திருக்கருகாவூர்
3. நோயற்ற வாழ்வு பெறுவதற்கு - ஸ்ரீவைத்தீஸ்வரன் கோயில்
4. ஞானம் பெற - சுவாமிமலை
5. கல்வி, கலைகள் வளர்ச்சிக்கு - கூத்தனூர்
6. எடுத்த காரியம் வெற்றி பெற மன தைரியம் கிட்ட - பட்டீஸ்வரம்
7. உயர் பதவி அடைய (வேலை வேண்டி) - கும்பகோணம் பிரம்மன் கோயில்



8. செல்வம், பெறுவதற்கு - ஒப்பிலியப்பன் கோயில்
9. கடன் நிவர்த்தி பெற - திருச்சேறை சாரபரமேஸ்வரர்
10. இழந்த செல்வத்தை மீண்டும் பெற - திருவிடைமருதூர் - மகாலிங்க சுவாமி
11. பெண்கள் நற்சமயத்தில் ருது ஆவதற்கும், ருது பிரச்சனைகள் தீரவும் - கும்பகோணம் காசி விஸ்வநாதர் கோயில் - நவ கன்னிகை
12. திருமண தடைகள் நீங்க - திருமணஞ்சேரி
13. நல்ல கணவனை அடைய - கும்பகோணம் ஆதிகும்பேஸ்வரர் - மங்களாம்பிகை
14. ஆதர்சன தம்பதி (கணவன் மனைவி ஒற்றுமை) - திருச்சத்திமுற்றம்
15. பிரிந்த தம்பதிகள் ஒன்று சேர - திருவலஞ்சுழி
16. பில்லி, சூனியம் செய்வினை கோளாறுகள் நீங்க - அய்யாவாடி ஸ்ரீ ப்ரத்யங்கிரா தேவி
17. கோர்ட்டு, வழக்குகளில் நியாய வெற்றி அடைய - திருபுவனம் சரபேஸ்வரர்
18. பாவங்கள் அகல - கும்பகோணம் மகாமக குளத்தில் நீராடல்
19. எம பயம் நீங்க - குளத்தில் நீராடல் ஸ்ரீ வாஞ்சியம்
20. ஆயுள் பெற - திருக்கடையூர்
21. தடைகள் நீங்க - அருள்மிகு நடனபுரீஸ்வரர் ஆலயம், (தண்டந்தோட்டம் - கும்பகோணம் அருகில்)

~ திருமதி விஜயலக்ஷ்மி

# குணப்படுத்தும் ஆற்றலுடைய படிகக் கற்கள்

படிகக் கற்களானது (CRYSTALS) கிரிஸ்டல்கள் என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகிறது. கிரிஸ்டல்கள் பன்னெடுங்காலமாக உடல் மற்றும் மனம் சம்மந்தப் பட்ட வியாதிகளுக்கு மிகச்சிறந்த தீர்வாக பயன்படுத்தப் பட்டு உள்ளது. ஒவ்வொரு கிரிஸ்டல்களும் தனித்தன்மை கொண்டதாகவும் தனி உள்கட்டமைப்பு கொண்டதாகவும் உள்ளது. ஒவ்வொரு கிரிஸ்டல்களும் தனி அதிர்வு அலைகளை (Frequency) ஏற்படுத்தக் கூடியதாக உள்ளது. உடல் உறுப்புகள், சுரப்பிகள், மற்றும் மனமானது இயற்கைக்கு மாறுபட்டு இயங்கும் பொழுது உடல் உபாதைகள் அல்லது நோய்கள் உருவாகக் காரணமாக அமைகிறது. சில குறிப்பிட்ட படிகக் கற்களின் ஆற்றலால் (தனித்தன்மையான அதிர்வுகளால் - Frequency) நமது உடலில் இழந்த நிலைப்புத்தன்மையை மீண்டும் பெறவும், உடல் சார்ந்த ஆற்றல்களை சமநிலைப் படுத்தவும் முடிகிறது. படிகக் கற்களானது நமது எண்ணம், உடல், உணர்ச்சி மற்றும் தெய்வீக ஆற்றல்களில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துகிறது. நாம் நன்றாக இருக்கிறோம் என்ற எண்ணத்தை மேம்படுத்தி எதிர்மறையான எண்ண ஓட்டங்களை சமன்படுத்தி நமது மன அழுத்தத்தைக் குறைக்கிறது. சில வகையான படிகக் கற்களைப் பற்றி காண்போம்.

## ஆக்டினோலைட் (ACTINOLITE):



இந்த ஆக்டினோலைட் எனும் கிரிஸ்டல் கல்லானது மேகத்தில் உள்ள சாம்பல் நிறமுடையது. இது உடல் ஆற்றல்களை அதிகப் படுத்தப் பயன்படுகிறது. எதிர்மறை எண்ணத்தை நீக்க, மன அழுத்ததைக் குறைக்க உதவுகிறது. உடல், மனம் மற்றம் ஆத்மாவை சம நிலைப்படுத்தப் பயன்படுகிறது. ஈரல் மற்றும் கிட்னி நன்றாக செயல்பட உதவுகிறது. தாழ்வுமனப்பான்மையைப் போக்குகிறது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்கிறது. தன்னைப் பற்றி அறிந்து விழிப்புணர்வு பெற இந்தக் கற்கள் பயன்படுகிறது.

## ஆம்பர் (AMBER):



ஆம்பர் கற்கள் கிரிஸ்டல் கற்களைப் போல் நிலத்தில் விளையாமல் பிசின் போன்ற படிமங்களாகக் கிடைக்கிறது. பல்வேறு விதமான மன உணர்ச்சிகளை சமன் செய்கிறது. மனதின் எண்ணங்களை தெளிவுபடுத்துகிறது. எதிர்மறை ஆற்றல்களை நீக்குகிறது. மன அழுத்தத்தைப் போக்குகிறது. அச்சம் (போபியா) மற்றும் பயத்தைப் போக்குகிறது.

## அமிதிஸ்ட் (AMETHYST):



ஜோதிடர்களிடம் இருக்கவேண்டிய படிகக் கல் அமிதிஸ்ட் ஆகும். இது ஊதா நிறக் (Purple) கல்லாகும். மனதை அமைதிபடுத்தவும், உள்ளுணர்வை அதிகப்படுத்தவும் (Intuitive Powers / Psychic Powers), பில்லி சூன்யம் / செய்வினை போன்றவற்றிலிருந்து பாதுகாக்கவும். ஆன்மீக ரீதியாக தூய்மைபடுத்தவும் மற்றும் பிரபஞ்சத்தையும் மனிதனையும் இணைக்கும் சஹஸ்ராரச் சக்கரத்தை தூண்டிவிடுவதற்காகவும் அமிதிஸ்ட் கற்கள் பயன்படுகிறது.

## அக்வாமரைன் (AQUAMARINE):



இது இளநீல நிறக் கல் ஆகும். தைரியக் கல் என்று அழைக்கப் படுகிறது. படிக்கும் திறன், அறிவு மற்றும் துரிதமான அறிவுச் செயல்பாடுகளுக்கும் இக்கல் பயன்படுகிறது. ஆன்மீக ஞானம் பெறவும் இந்த அக்வாமரைன் கற்கள் பயன்படுகிறது.

## அவென்சுரின் (AVENTURINE):



காதல் கைகூட, காதல் மற்றும் விளையாட்டுகளில் சாதனைப் புரிய, தோல் வியாதிகள் குணமாக, சருமம் பொலிவு பெற, தசைகள் மற்றும் நரம்புகள் பலம் அடைய, ஆக்க அறிவு (Creativity) அதிகரிக்க இந்தக் கற்கள் பயன்படுகிறது. எழுத்தாளர்கள் மற்றும் சினிமா போன்ற கலைத்துறையில் உள்ள கலைஞர்களுக்கு உகந்த கல் அவென்சுரின் ஆகும். இது செல்வச் செழிப்பு மற்றும் பணத்தை ஈர்க்கக்கூடிய அதிர்வலைகளை உருவாக்கூடிய தன்மைகளைப் பெற்றிருப்பதால் வியாபாரம் செய்யக்கூடியவர்கள் பயன்படுத்தக் கூடியது.

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்




# பிறந்த நேரம் சரி செய்தல்

பிறந்த நேரம் சரி செய்யவேண்டிய அவசியம் என்ன ?

ஒரு ஜாதகரின் உயிரை குறிக்கும் இடம் லக்னம்.

அவர் உடல் மற்றும் மனதை குறிக்கும் கிரகம் சந்திரன்.

உடலும் உயிரும் ஒன்றிணைந்திருந்தாலே ஒருவர் மனிதராக இயங்க முடியும்..

ஆகவே உயிரை குறிக்கும் லக்னத்திற்கும்

உடலை குறிக்கும் சந்திரனுக்கும் தொடர்பு அவசியம்.

ஒரு ஜாதகத்தில் அத்தொடர்பு இல்லாவிடில் அந்த ஜாதகத்தின் பிறந்த நேரம் சரி செய்யப்படவேண்டும்.

ஒரு லக்னத்தின் உபாதிபதியே அந்த லக்னத்தின் அனைத்து செயல்பாடுகளுக்கும் பொறுப்பேற்கும் கிரகம்.

நட்சத்திர கணித ஜோதிட (Stellar astrology) அடிப்படையில் ஒரு கிரகம் தான் நின்ற நட்சத்திர அதிபர் மூலமாகவே பலன் அளிக்க வல்லவர்.

எனவே லக்ன உபாதிபதி, சந்திரன் நின்ற நட்சத்திராதிபதியைக் காட்ட வேண்டும்.

சந்திரன் ஒரு நட்சத்திரத்தின் மீது ஒரு நாளைக்கு பயணிக்கும்.

லக்ன உபாதிபதியோ 3 முதல் 8 நிமிடங்களில் ஒரு புள்ளியைக்கடக்கும்.

எனவே சந்திரனை நிலையாகக்கொண்டு லக்ன உபாதிபதியை நகர்த்தி பிறந்த நேரத்தை சரி செய்ய வேண்டும்.

ஜாதகரிடம் சில கேள்விகளைக் கேட்டு அந்த நேரத்தை உறுதி செய்ய வேண்டும்.

~ TKP கோபால்



# பெயர், புகழ் மற்றும் செல்வ செழிப்பிற்கு
# ஸ்வப்ன வாராகி தாரண எந்திரம்

வாராஹி அன்னை சப்த கன்னிமார்களில் ஐந்தாவதாக கன்னிமாராக இருப்பதால் பஞ்சமி என்றும் அழைக்கப்படுகிறார். அன்னை வாராஹி காக்கும் கடவுளான திருமாலின் வாராக அவதாரத்தின் பெண் அம்சம் ஆவார். இரண்யாட்சனிடமிருந்து வாராக மூர்த்தி பூமியை காத்தினால், பூலோக சுகங்களான பொன், பொருள், வீடு வாகனம் போன்றவற்றை வாரி வழங்கும் தெய்வமாக வாராஹி அம்மன் பார்க்கப்படுகிறார். வாராஹி அம்மன் பூமியை காக்கும் பூமாதேவியின் மறுஉறுவமாகவும் பார்க்கப்படுகிறார்.

ஸ்வப்ன வாராஹி தாரண எந்திரத்தை பூஜை அறையில் வைத்து தீப தூபம் ஏற்றி, மல்லிகை பூவை வைத்து. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மந்திரத்தை தினமும் இரவு 21 முறை ஜபிக்க வேண்டும். இப்படி 41 நாட்களுக்கு செய்து வந்தால், பெயர், புகழ் மற்றும் செல்வ செழிப்பிற்கான வழி பிறந்து செல்வ நிலை உயரும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. கனவில் சில விடை தெரியாத கேள்விக்கான பதிலையும் தருவது வாராஹி அன்னையின் மகிமை ஆகும்.

### மந்திரம்:

"ஓம் ஹ்ரீம் நமோ வாராஹி அகோரே ஸ்வப்ன தர்ஷாயே தஹ தஹ ஸ்வாஹா"

எனும் மந்திரத்தை தினமும் ஸ்ரீ சக்கரம் தீப தூப ஆராதனையுடன், மல்லிகை மலர் கொண்டு 108 முறை மந்திர உச்சாடனம் செய்து வந்தால்  தன நிலையை உயர்த்தி வீடு, வண்டி, சொத்து மற்றும் சகல ஐஸ்வர்யங்களையும் அடைய முடியும்.



~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

# ஜோதிடக் கதைகள்

# "இனம் இனத்தோடு சேரும்"

எனக்கு ஒரு உபகாரம் செய்வீர்களா என்றாள், என்ன? என்றனர் - சற்றே சோகமாக அவள் என் கணவர் என்னை விட்டுப் பிரிந்து சென்று நான்கைந்து ஆண்டுகள் ஆகிவிட்டது அவர் மீண்டும் வருவாரா? என்னோடு வாழ்வாரா? எனக் கேட்டபடி குடத்தை கிணற்றுக்குள் விட்டாள், கயிறுடன் சோகமும் பிணைந்திருந்தது.

நம்முடைய இரண்டு ஜோதிட மாணவர்களும் ஏதேதோ கணக்குகள் போடத் தொடங்கினார்கள் அந்தப் பெண்மணியும் தண்ணீர் மிகுந்த குடத்தை மேலே இழுத்து, குடத்து நீரை கையில் பிடித்து தன்னை நோக்கி இழுக்க பிடி தளர்ந்தது. நீர் நிரம்பிய குடம் கை தவறி கிணற்றுக்குள் விழுந்தது- அந்த மண்குடம் உடைந்த சத்தமும் கேட்டது, பெண்மணி திகைத்தாள்.



இந்த இருவருமே கை நழுவி குடம் உடைந்தது பற்றி கவலைப் படவில்லை, ஒருவன் உடனே அம்மா உங்கள் கணவர் போனவர் போனவர் தான் வரமாட்டார், அவரை மறந்து விடுங்கள் என்றான், அவள் அதிர்ந்தாள் இன்னொருவன் "கவலைப் படாதீர்கள் அம்மா இன்னும் ஒரு வார காலத்திற்குள் உங்கள் கணவர் வந்து உங்களுடன் சேர்ந்து விடுவார், என்றான் அவளுக்கு ஆச்சர்யம் மகிழ்ச்சி.

சரி, முதலில் நீங்கள் என் வீட்டுக்கு வாருங்கள் என ஊருக்குள் அழைத்துப் போய், ஊர்க்காரர்களிடம் நடந்ததைக் சுடறினாள்.

ஊர்ப்பெரியவர் ஒருவர், தம்பிகளா இருவரும் ஒரே ஆசானிடம் பயின்றீர்கள், உங்களில் யார் சொல்வது சரி என்று பார்ப்போம் இருவரும் ஒருவார காலத்திற்கு இங்கேயே இருங்கள் யார் சொன்ன ஆருடம் பலிக்கிறது பார்ப்போம், என்றார் இருவரும் அங்கேயே தங்கினர்.

ஆறாவது நாள் அந்தப் பெண்மணியின் கணவர் அவளைத் தேடி வந்தார், பெண்மணி மட்டுமல்ல ஊரே மகிழ்ந்தது.

ஊர்ப்பெரியவர் இப்பொது, ஏனப்பா இருவருமே ஒரு ஆசானிடம் கற்றீர்கள் ஒருவன் இவளது கணவர் வரமாட்டார் என்றும் இன்னொருவன் ஒரு வாரத்திற்குள் வருவார் என்றும் வேறுவேறு பலன்களை சொன்ன தின் மர்மம் என்ன? முதலில் அதை விளக்குங்கள் என்றார்.

வரமாட்டார் என்று சொன்ன இளைஞர், அய்யா இந்த அம்மா நீர்நிறைந்த குடத்தை கையில் பிடிக்கும் சமயத்தில் கைநழுவிவிழுந்து உடைந்து விட்டது அதனால் தான் இவர் கணவன் கை நழுவிப் போய் விட்டார், வர மாட்டார் என்று சொன்னேன் என்றான்.

இன்னொருவனோ, அய்யா கிணற்றிருந்த தண்ணீரை இவர் மண் குடத்தில் எடுத்தார் அது கைக்கு கிடைக்கும் நேரத்தில் கைநழுவி கிணற்றுக்குள்ளேயே விழுந்து நீர் நீரோடு சேர்ந்துவிட்டது மண்குடமும் உடைந்து கிணற்றடியில் உள்ள மண்ணோடு சேர்ந்து விட்டது இதையே ஆரூடமாகக் கணித்து, இனம் இனத்தோடு சேரும், என்று சொன்னேன் என்றார்.

எல்லோரும் மகிழ்ந்தார்கள் ஊர்ப்பெரியவர்  ஒரே வானத்தில் உலவும் நிலா குளிர்கிறது, சூரியன் சுடுகிறது, இவர்கள் ஒருவரிடமே ஜோதிடம் கற்றாலும் ஜோதிடத்தில் வேறுபாடு இல்லை, அதைக் கணிப்பவனின் திறமையில் தான் வாக்கு வன்மை உள்ளது

எனவே ஜோதிடம் என்பது கணிப்பவனின் மனதளவே யாகும்.

~ ரா. பன்னீர்செல்வம்




உங்கள் இல்லத்தில் வைதீக/ஆகம முறைப்படி யாகங்கள் மற்றும் சத்ய நாராயண பூஜை போன்ற அனைத்து பூஜைகளும் செய்து தர அணுகவும்

**www.priestservices.com**

போன்: **95660 00134**

# புணர்ப்பு தோஷம்

KP ஏன்றழைக்கப்படும் கிருஷ்ணமூர்த்தி பத்ததி முறையில் அனுசரிக்கப்படும் ஒரே ஒரு தோஷம் புணர்ப்பு தோஷம் மட்டுமே..

சனி என்ற மிக மெதுவாக செல்லும் கிரகமும் சந்திரன் என்ற அதி வேகமாக செல்லும் கிரகமும் ஒன்றிணைவதால் ஏற்படும் நிலைப்பாட்டிற்கு பெயர் புணர்ப்பு தோஷமாகும்.

புணர்ப்பு தோஷத்தால் ஏற்படும் விளைவுகள் மிகக் கடுமையானதாக கருதப்படுவதில்லை. இதனால் தாமதத்தையும், தடங்கலையும் ஏற்படுத்திக் கொண்டே இருக்கும்.

திருமணத்தில் தாலி கட்டுவதற்கு சற்று முன் கூட திருமணத்தை நிறுத்தி பெண் அல்லது மாப்பிள்ளையை மாற்ற வைத்துவிடும்.

எந்த செயலையும் முதல் முயற்சியிலேயே முடிக்க அனுமதிக்காது.


மீண்டும் மீண்டும் முயற்சித்தே முடிக்க முடியும்.

மறுசிந்தனை செய்து எடுத்த காரியத்தை முடிக்க நினைக்கும்போது அந்த காரியத்தை இன்னும் செவ்வனே செய்ய வழி வகுக்கும்.

சனியும் சந்திரனும் ஒன்றாக நின்றாலோ,<br>
சனியின் நட்சத்திரத்தில் சந்திரன் நின்றாலோ,<br>
சந்திரனின் நட்சத்திரத்தில் சனி நின்றிருந்தாலோ,<br>
சனி சந்திரனை பார்த்திருந்தாலோ,<br>
சந்திரன் சனியை பார்த்திருந்தாலோ,<br>
சனி வீட்டில் சந்திரன் நின்றாலோ,<br>
சந்திரன் வீட்டில் சனி நின்றாலோ,<br>
புணர்ப்பு தோஷம் ஏற்படுகிறது.

நாரதர் கலகம் நன்மையில் முடியும் என்பது போல புணர்ப்பு தோஷத்திற்கு உரிய மரியாதை கொடுத்தால் நன்மையில் முடியும்.

~ TKP கோபால்



# மூலிகை ரகசியம்

## திருநீற்றுப் பச்சிலை (OCIMUM BASILICUM)

மூலிகை ரகசியம் பகுதியில் நாம் பார்க்கவிருக்கும் மூலிகை, திருநீற்றுப் பச்சிலை, இதை மூலிகைகளின் அரசன் என்றே சொல்வார்கள். இளம்பச்சை, கரும்பச்சை, நீலம் என பல நிறங்களில் இது கிடைக்கும். தாவர வகைகளிலேயே பச்சிலை என்ற பெயரைக்கொண்ட ஒரே மூலிகை இந்த திருநீற்றுப் பச்சிலையாகும். தமிழ் நாட்டில் ஒரு சில வகைகளே அதிகமாகக் கிடைக்கிறது.

சாதாரணமாக வீட்டுத் தோட்டங்களில் வளரும் தன்மை கொண்ட திருநீற்றுப் பச்சிலை நல்ல மணமுள்ள தாவரமாகும். இதன் இலைகளே அந்த நறுமனத்தைத் தரவல்லதாய் இருக்கிறது, இதன் மருத்துவப் பயன்கள் குறித்து பார்ப்போம்.



### குணமாக்கும் நோய்கள்

முகப்பரு, கால் ஆணி, சளி, காய்ச்சல், ஒற்றைத் தலைவலி, பிரசவ வலி, வாய்ப்புண், அல்சர் மூலம், வயிற்றுப்புக்கடுப்பு, வெள்ளைப் படுதல் என நாம் சாதாரணமாக எதிர்கொள்ளும் பல நோய்களைத் தீர்த்து வைக்கும் ஆற்றல் பெற்றது இந்த திருநீற்றுப்பச்சிலை.

### பயன்படுத்தும் முறை

இதன் இலைகளுடன் சிறிதளவு வசம்பு வைத்து அரைத்துப் பூச, முகப்பருக்கள் மறையும் இலைகளை முகர்ந்து பார்த்தாலும் நல்லது. இலைகளைக் கசக்கி சாறுஎடுத்து இரண்டு சொட்டுகள் காதில் விட, காது வலி, சீழ் வடிதல், போன்றவை குணமாகும். இந்த இலைகளில் சாறை தேள்கடித்த கடிவாயில் இட்டு, கசக்கி இலைகளை அந்த இடத்தில் கட்டுவதால் தேளின் விஷம் இறங்கும். இலைகளை அரைத்து, காலில் ஆணி உள்ள இடத்தில் கட்டி வர, நாளடைவில் கால் ஆணி குணமாகும்.

இதன் வேரை இடித்து, கசாயம் செய்து குடித்துவர, வயிற்றுப்புண், காய்ச்சல், சிறு நீரில் பிரச்சினை என அனைத்தும் தீரும். இலைச் சாற்றுடன் சம அளவு தேன் கலந்து 30மி அளவுக்கு சாப்பிட சளி, இருமல், வாயுத்தொல்லைகள் நீங்கும்.
50மி லி , இலைச் சாற்றை 1 டம்பளர் பாசும் பாலுடன் கலந்து குடிக்க, வெள்ளைப் படுதல் நிற்கும்.
இதன் விதைகளைக் காயவைத்து எடுத்து 1 டம்பளர் தண்ணீரில் இரவில் ஊறவைத்து, காலையில் குடிக்க, பித்தம் தணியும்.

இன்னும் பல அரிய மூலிகைகளை திருநீற்றுப்பச்சிலையைப் பயன்படுத்தி நோயற்ற உடலைப் பெறுவோம்.


~ ரா. பன்னீர்செல்வம்

# வாஸ்துவின் படி நேர்மறை மற்றும் எதிர்மறை சக்திகள் செல்லும் திசைகளும் அறைகள் அமைக்கும் விதமும்

மின்காந்த மற்றும் விண்காந்த சக்திகளானது வடகிழக்கு திசைகளில் இருந்து பிற திசைகள் நோக்கி நகர்கிறது. இதே போல் எதிர்மறை சக்தியானது தென்மேற்கு திசைகளில் இருந்து பிற திசைகள் நோக்கி நகர்கிறது. வெற்று நிலத்தில் 360 பாகை கொண்ட வட்டமாக பாவித்து நான்கு திசைகளான வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கு திசைகளுக்கு திசைக்கு 50 பாகை வீதமாக 4 X 50 = 200 பாகைகளும். நான்கு திக்குகளான வடகிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு மற்றும் வடமேற்கு திக்குகளுக்கு திக்குக்கு 40 பாகைகள் வீதம் 4 X 40 = 160 பாகைகளுமாக பிரிக்கப்பட்டுள்ளது.

**நேர்மறை சக்தி நகரும் விதம்:**


1. நேர்மறை சக்தியானது கிழக்கு சார்ந்த வடகிழக்கு திசையில் இருந்து வடக்கு சார்ந்த வட மேற்கு திசை நோக்கி நகர்கிறது. மற்றும்
2. வடக்கு சார்ந்த வடகிழக்கு திசையிலிருந்து தெற்கு சார்ந்த தென்கிழக்கு திசை நோக்கி நகர்கிறது.



எதிர்மறை சக்தி நகரும் விதம்:

1. எதிர்மறை சக்தியானது தெற்கு சார்ந்த தென்மேற்கு திசையிலிருந்து வடக்கு சார்ந்த வடமேற்கு திசை நோக்கி நகர்கிறது. மற்றும்
2. மேற்கு சார்ந்த தென்மேற்கு திசையிலிருந்து கிழக்கு சர்ந்த தென்கிழக்கு திசை நோக்கி நகர்கிறது.

மேலே மற்றும் கீழே உள்ள படங்களில் நேர்மறை சக்தி நிலவும் இடங்களில் பச்சை வண்ணத்தில் "+" குறியீடும் எதிர்மறை சக்தி நிலவும் இடங்களில் சிகப்பு வண்ணத்தில் "-" குறியீடும் கொடுக்கப்பட்டுள்ளது.




மேலே உள்ள படத்தில் "+" குறியீடுள்ள திசைகளில் ஆச்சாரமான அறைகளான பூஜை அறை போன்ற அறைகளும். "-" குறியீடுள்ள திசைகளில் அனாச்சாரமான படுக்கை அறை / குளியல் அறை போன்ற அறைகளும் அமைக்க வேண்டும்.

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

# மந்திர மகிமை

# செல்வம், புகழ், மகப்பேறு கிடைக்க

சௌந்தர்ய லஹரியில் அன்னையின் அழகான கண்களின் அருளை விளக்கி வர்ணிக்கும் இந்தப்பாடல் சகல சௌக்கியங்களையும் அளிக்க வல்ல சக்தியைப் பெற்றுள்ளது இந்தப் பாடலை மந்திரமாய் எண்ணி, நாம் ஜபம் செய்யும் பொழுது நமக்குத் தேவையான புகழ், எதிர்பார்க்கும் செல்வம், அறியதான மகப்பேறு ஆகியன வந்து குவிந்து நம் வாழ்வை வளமாக்கும்.



### மந்திரம்

த்ருசா த்ராகியஸ்யா தரதளித நீலோத்பல-ருசா
தவீயாம்சம் தீமை ஸ்நபய க்குபய மாமபி சிவே
அநேணயம் தன்யோ பவதி நசதே ஹானி - ரியதா
வனே வ ஹர்ம்பே வ ஸமகர - ருபாதோ - ஷிமகர

### மந்திரத்தின் பொருள்

இப்போது தான் மலர்ந்திருப்பது போன்ற
கருங்குவளை மலர்களைப்போல பிரகாசம் கொண்ட அழகிய கண்களைக் கொண்ட மங்கள வடிவினளே, சந்திரனின் ஒளி எப்படி காட்டிலும் நாட்டிலும் மாளிகையிலும்
குடிசையிலும் சமமாக பொழிகின்றதோ அதைப்போல நினது கருணைப் பார்வையானது இந்த ஏழையின் மீதும் பொழியட்டும் உன் பார்வை நீராட்டினால் என் துன்பங்கள் தொலைந்து இன்பமும் செல்வமும் பெருகும் தாயே.

### மந்திரத்தை பிரயோகிக்கும் முறை

இந்த மந்திரத்திற்கான யந்திரத்தை முதலில் தங்கத் தகட்டில் வரைந்துகொள்ள வேண்டும், இதனை பூஜையில் வைத்து.

தினமும் 1000முறை வீதம் 6நாட்கள் கிழக்கு முகமாக அமர்ந்து மந்திரத்தை ஜபிக்க வேண்டும்.

யந்திரத்தின் மேல் பகுதியில் சிவப்பு மலர்களால் லலிதா த்ரிசதி அர்ச்சனை செய்ய வேண்டும். யந்திரத்தின் கீழ்ப் பகுதியில் செந்தாமரை இதழ்களைக்கொண்டு லஷ்மி அஷ்டோத்தர அர்ச்சனை செய்தல் நலம்.

பால் பாயசம், தயிர்சாதம், தேன், தாம்பூலம் இவற்றால் நைவேத்யம் செய்ய வேண்டும்.

### பயன்

மேற்கண்ட முறையில் மந்திர ஜபமும் பூஜையும் செய்வதால் தேவையான செல்வமும் சிறந்த புகழும் சந்தான ப்ராப்தியும் கிடைத்து வாழ்வாங்கு வாழலாம்.

~ ரா. பன்னீர்செல்வம்

# சகல பாக்கியங்கள் தரும்
# ஸ்ரீ வாராஹி அம்மன்

சாக்தம் - சைவம் - வைணவம் ஏன்ற மூன்று பிரிவுகளும் ஐற்றுக் கொண்ட அம்பாள் ஸ்ரீ வாராஹி அம்மன். ஒருவர் வாழவின் அனைத்து அம்சங்களிலும் வெற்றி பெற வேண்டுமானால் வாராஹியின் அருளைப் பெற வேண்டியது அவசியமாகும். ஈது குறித்து விரிவாக அறிந்து கொள்ளலாம்.
பன்றி முகத்துடன் சிங்க வாகனத்தில் காட்சி தருபவர் வாராஹி அம்மன். சப்த கன்னிகளில் ஒருவரான வாராஹி அம்மனின் சிறப்புகளையும் அவரை வழிபடும் முறைகளையும் பார்ப்போம்.



திருமாலின் வராக அவதார அம்சமாக பார்க்கப்படும் அம்மன் வாராஹி அம்மன். அந்தகாசுரன் எனும் அரக்கனை சிவ பெருமான் அழித்தபோது அவருக்கு துணையாக ஏற்படுத்தப்பட்ட சக்தியர் பிராமி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராஹி, ஈந்திராணி, சாமுண்டி ஆகிய சப்த கன்னியர் அவர்களுக்குள் மிகவும் போற்றுதலுக்குரியவள் வாராஹி ராஜராஜேஸ்வரியின் போர் படைத்தலைவியாக விளங்குபவள் அந்த வாராஹியே.

இவரின் இறு கரங்களில் வரத, அபயஹஸ்தத்துடன் உள்ளார். மற்றகைகளில் சூலம் ஐந்தியும், கபாலம், உலக்கை, நாகத்தை பிடித்திருக்கிறார்.
(சென்னையை சேர்ந்த வாராஹி ஊபாசகர் ரங்கநாதன் ஐயங்கார் வாராஹியை பற்றி தகவல்களை தருகிறார். படித்து பலன் பெறுங்கள்)
பன்றி முகத்துடன் எழில் நங்கையின் உடலும் கொண்டு சொர்ண நிறமாக காட்சி தருகிறாள். எருமை, குதிரை, சிங்கம், புலி போன்றவை ஸ்ரீவாராஹியின் வாகனங்களாகும்.

## ஸ்ரீ வாராஹியே அன்னை

அன்னை பராசக்தி ஏற்கின்ற எண்ணற்ற வடிவங்களில் முதன்மை ஸ்தானத்தில் வல்லமையுடன் இருப்பவள் ஸ்ரீ வராஹி. வாராஹி ரூபத்தில் பூமியை பிரளயத்தின் அடியிலிருந்து வெளிக்கொணர்ந்த ஸ்ரீ மகாவிஷ்ணுவின் துணைவியாக - பூமா தேவியாக ஸ்ரீ வாராஹி அன்னை வருகிறாள்.
கம்சனுக்கு எட்டுக் கரங்களுடன் காட்சி அளித்த கிருஷ்ணாவதாரத்தை தெரியப்படுத்தியவள் இந்த ஸ்ரீ வாராஹி அன்னைதான்.

வேதகாலத்தில் வாக்கு தேவியாகவும் - சரஸ்வதியாகவும் வழிப்பட்ட தேவி திருப்பதி - திருச்சானுரில் இருக்கும் பணி அலர்மேல் மங்கையின் சேனை தலைவியாக விளங்குவதாக தேவி மகாத்மியம் கூறுகின்றது. அவருக்கே முதல் பூஜை அவரது அனுமதியுடன் தான் ஸ்ரீநிவாஸ பெருமாள ஈங்கே கோயில் கொண்டுள்ளார். இதைத் தவிர குண்டலினி யோக முறையில் நம் உடலில் புருவ மத்தியில் இருக்கும் ஆக்ஞா சக்கரத்திலும் பஞ்சமி ஸ்ரீ வாராஹியாக இருக்கின்றாள்.
சப்தமாதர்களில் ஸ்ரீ வாராஹி யெனும் மாபெரும் சக்தியாக இருப்பவர் இந்த ஸ்ரீ வாராஹி அன்னையே. ஸ்ரீ வாராஹி - பஞ்சமி - விஸ்வ விஜயா - பத்ரகௌமுகி - வார்த்தாளி இகிய பெயர்களில் அழைக்கப்படுபவரும் இந்த ஸ்ரீ வாராஹி அன்னையே.

சிங்கத்தில் வரும்போது சிம்ம வருடபா என்றும் குதிரை மீது வரும்போது ஆஸ்வரூபா ஏன்றும் எருமை வாகனத்தில் வரும்போது மகிஷாரூபா, என்றும் புலி வாகனத்தில் வரும்போது வியாக்ரூபா அன்றும் அழைக்கப்படுகிறாள் ஸ்ரீ வாராஹி அன்னை.

- சக்திகளிலே சாந்த சொரூபமும் உண்டு, உக்ர சொரூபமும் உண்டு. பக்தர்கள் பூஜை செய்யும் போது சாந்த கோலம் கொண்ட புன்சிரிப்போடு திகழ்கிறாள் அன்னை.
- பக்தர்களை சத்ருக்கள் சோதிக்கும் போது கோபம் கொண்டு அசுரனை வதம் செய்ய உக்ர நிலையை அடைகிறாள்.
- ஆதி பராசக்தி வடிவங்களில் உயர்ந்த வடிவம். தோல்வியை துரத்தி எளிதில் வெற்றி கொடுக்கும் வடிவம்தான் ஈந்த வாராஹி.
- வாராஹி ஏன்றால் வரம். இவள் அதர்வண வேதத்தின் தலைவியாகவும் விளங்குகிறாள்.

"ஏழிற்பெரும் சேனை ஏதிர்வரினும் விலக்க வல்லாள்
ஒரு மெல்லியதன் பாதம் விரும்புகவே"

என கூறுகிறது வாராஹி மாலை, எத்தனை சேனைகள் கோடியளவில் நின்றாலும் அவள் பாதத்தை பணிந்த பக்தனுக்காக அத்தனை பேரையும் வீழ்த்தி தன் பக்தனை காத்து ரட்சிப்பவள் என்று வாராஹி மாலை அவள் வீரத்தை புகழ்கின்றது.

32 பாடல்களை கொண்டது வாராஹி மாலை. ஸ்ரீ வாராஹி மாலை படிப்பது மிகவும் நல்லது. ஈரவு படிப்பது உத்தமம். ஸ்ரீ வாராஹி பூஜைக்கு ஊகந்த நேரம் இரவுதான்.
முல மந்திரத்தால் ஜெபம் செய்தபின்பு கீதமந்திர கோசம் ஸ்ரீ வாராஹி சித்தி அர்சனை செய்வது மிகவும் நல்லது. ஸ்ரீ வாராஹிக்கு செந்தாமரை, செவ்வரளி, மாதுளையால் அர்ச்சனை செய்யலாம். வள்ளிக்கிழங்கு, தேன், பேரிச்சம்பழம், மொச்சை வேகவைத்து தேன் சேர்த்து நைவேதியம் செய்யலாம்.

அடுத்த இதழில் தொடரும்.....

~ திருமதி. அண்ணபிரிய லட்சுமி

# ஜோதிடக்கதை

# எல்லாம் விதிப்படியே

மன்னரும் அமைச்சரும் அந்த புதிய ஜோதிடரின் முகத்தையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தனர். ஜோதிடரே ஒன்றுக்கு பலமுறை சோழிகளை உருட்டுவதும் மன்னரின் முகத்தைப் பார்ப்பதுமாக இருந்தார். ஏதோ சந்தேகத்தோடு மீண்டும் சோழிகளை குலுக்கிப் போட்டார்.

குறுக்கிட்ட அமைச்சர், "அய்யா ஜோதிடரே... மன்னர் ஒரே ஒரு கேள்விதான் கேட்டார், அதற்கு ஏன் இத்தனை முறை சோழிகளை குலுக்கி, உருட்டி உயிரை எடுக்கிறீர்"? என்று கேட்க, ஜோதிடர் பொறுமையுடன் அமைச்சர் பெருமகனாரே.. நான் சோழிகளை திரும்பத்திரும்ப போடுவதன் காரணம், மன்னருக்கு நான் சொல்லும் பதில் இறுதியானதாகவும் உறுதியானதாகவும் இருக்கு வேண்டும் என்பதால்தான் என்றார்.



மன்னர் சரி இப்போதாவது உங்களுக்கு உறுதியான பதிலை சோழிகள் சொல்லிவிட்டதா, இல்லையா?.. என்று சற்றே கடுப்புடன் கேட்டார். ஜோதிடர் "அரசே! பொறுமை காக்க வேண்டும் என்னிடம் மட்டுமல்ல நான் சொல்லப்போகும் பதிலிலும் தாங்கள் பொறுமை காத்தே ஆக வேண்டும், என்று தாழ்மையுடன் கூறினார்.

அமைச்சர் சற்றே கோபமுடன், அய்யா ஜோதிடரே இன்னும் மூன்று மாத காலத்திற்குள் நம் நாட்டின் மீது படையெடுப்பு நடக்கும் என்றீர் அதுவும் நமது அண்டை நாட்டு மன்னனால் படையெடுப்பு நிகழும் என்றீர் நம் நாட்டிற்கு நாற்புறமும் உள்ள அண்டை நாடுகள் எல்லாமே நமது சிற்றரசுகள் அவர்கள் எல்லாம் நமக்கு கப்பம் கட்டும் குறுநில மன்னர்கள். அவர்கள் யாருக்கும் நம்மை எதிர்க்கும் துணிவும் இல்லை, எண்ணமும் இல்லை, பிறகு எப்படி உங்கள் ஜோதிட பலனை எங்களால் ஏற்க இயலும், என்று கேட்டார்.

இது ராஜகாரி அதிலும் மன்னரும் அமைச்சரும் என் ஜோதிட மதி குறித்து இத்தனை கேள்விகள் கேட்கும்போது ஏனோ தானோ வென்று எதையாவது சொல்லிவிட்டால் என் தலை தப்பாது என்பதை நான் நன்கு அறிவேன் நான் உறைப்பது பொய்யா, உறுதியாக இன்னும் மூன்று மாத காலத்தில் போர் நிகழும் என்று பயந்தபடி கூறினார்.

எந்த அடிப்படையில் இவ்வளவு உறுதியாக கூறுகிறீர்? அமைச்சர் கேட்க. ஜோதிடர் என் ஆழ்ந்த ஜோதிடப் புலமையே இதற்கு அத்தாட்சி இதுவரை என் கணிப்பு பொய்த்ததில்லை இனியும் பொய்க்காது, நமது நாட்டின் விதி அப்படி, போர் நடந்தே தீரும்.

அரசர், இது தான் விதியா? போர் நடந்தே தீருமா? சரி, வெற்றி யாருக்கு? எனக்கேட்க, வீரமங்கையின் துணைவரே வெற்றி மங்கை உங்களுக்குத்தான் மாலை சூட்டுவாள் இதில் எந்த சந்தேகமும் இல்லை, ஜோசியர். சற்றே யோசித்த அமைச்சர் சரி அப்படியானால் வரும் மூன்றுமாத காலமும் நீங்கள் எங்கள் கண்காணிப்பில்-கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்,

அப்படியா? ஜோசியர்,
ஆம் இது வேண்டுகோள் அல்ல கட்டளை, என அமைச்சர் சொன்னதும் அரசன் குறுக்கிட்டு ஜோதிடரே நாட்டின் விதியைக் கணித்த தாங்கள் என் விதியை கணித்து, இன்று எனக்கு என்ன நடக்கும் என்று கூறுங்கள், அதன்படி நடந்துவிட்டால் உங்களை சகல மரியாதைகளோடு நாளையே அனுப்பி வைக்கிறேன், என்றார். இதைக்கேட்ட ஜோதிடர் உறுதியான பார்வையோடு சோழியை உருட்டினார். அரசரும் அமைச்சரும் சோதிடரையே பார்க்க, விரல்விட்டு ஏதோ எண்ணிய ஜோதிடர். "அரசே! இன்று நீங்கள் மிதமிஞ்சிய இனிப்பை அருந்துவீர்கள்", என்றார்.

ஆவேசமாக சிரித்த அரசன், "ஜோதிடரே இன்றே உங்கள் கணிப்பை பொய்யாக்கி விதியை வென்று காட்டுகிறேன் என்றவர் அமைச்சரை நோக்கி, அமைச்சரே, இன்று அரண்மனையில் இனிப்பு என்ற சொல்லுக்கே இடமிருக்கக் கூடாது, இது என் உத்தரவு என்றார்.

நல்லது மன்னா என்ற அமைச்சர், சற்றே சந்தேகத்தோடு "யாரேனும் விருந்தினர் வந்து தங்களுக்கு இனிப்பை அன்புடன் கொடுத்தால் அதை தவிர்க்க முடியாதே, அப்படி தவிர்த்தால் அபகீர்த்தி ஏற்படுமே" என்றார். அதற்கும் ஓர் உபாயம் உள்ளது, நான் இப்போதே அரச அடையாளங்களைத் துறந்து எல்லையில் உள்ள காட்டுப்பகுதிக்கு செல்கிறேன், என்னுடன் யாரும் வரவேண்டாம், காட்டில் எப்படி இனிப்பு கிடைக்கும்? நானாக கனிகளை சாப்பிட மாட்டேன், விதி எப்படி வெல்லும், பார்க்கலாம் என்றார்.

ஜோதிடர் அரண்மனைக் காவலில் அமைச்சர் அரண்மனையைக் கண்காணித்திட, அரசரோ யாரும் அறியாமல் மாறுவேடம் பூண்டு எல்லையில் உள்ள காட்டை நோக்கிச் சென்றார். காட்டில், ஓர் அடர்ந்த புதர் மறைவில் தன் குதிரையைக் கட்டிய அரசர், அங்கிருந்த ஒரு பெரிய மரத்தில் ஏறி ஓய்வெடுப்பது போல அமைதியாக அமர்ந்து கொண்டார்.

மாலை நெருங்கியது,
இன்னும் கொஞ்ச நேரந்தான், இரவு வந்து விட்டால் நாள் முடிந்துவிடும், விதியை வென்று விடுவேன் என எண்ணினார் அரசர். அந்த நேரத்தில் பத்து பதினைந்து குதிரைகளில் ஒரு குழுவினர் மரத்தடியில் வந்து சேர்ந்தனர், கிடுகிடுவென விறகுகளை சேகரித்து கற்களால் அடுப்பை மூட்டி, பெரிய பாத்திரங்களில் சமைக்க ஆரம்பித்தனர்.

ஒரு பெரிய பாத்திரத்தில் பாயசம் தயார் ஆனது, இதைப் பார்த்த அரசர், இவர்கள் இனிப்பை சமைத்தாலும் இதை நான் சாப்பிட்டால் தானே, என அமைதியாய் இருக்க, அரசரை யாருமே பார்க்கவில்லை.

அவர்கள் பெரிய கொள்ளைக்கும்பல் என்பது பக்கத்து நாட்டில் பொன், பொருளைக் கொள்ளையடித்து இங்கு வந்து சமைத்து உண்கிறார்கள் என்பதும் அவர்களது பேச்சில் தெரிந்தது. மற்ற நேரமாய் இருந்திருந்தால் ஒரே வீச்சில் அந்த கள்வர்களை வெட்டி வீழ்த்தியிருப்பார் அரசர் ஆனால், இன்று விதியை வெல்ல வேண்டுமே, அமைதியாய் இருந்தார்.

இந்த நேரத்தில் அன்னாந்து தண்ணீர் குடித்த திருடன் ஒருவன், மரத்தின் மேலிருந்து அரசரைப் பார்த்து விட்டான், தன் தலைவனிடம் யாரோ ஒருவன் மந்திரன் மேல் இருப்பதாகக் கூற, எல்லோரும் அரசனை கீழே இறங்கச் செய்தனர்.

திருடர்களில் ஒருவன், தலைவரே ஒருவேளை இவன் நம்மைப் பின் தொடர்ந்து வந்திருப்பான், நம்மையெல்லாம் பிடிக்கும் நோக்கத்தில் நாம் சமைத்த உணவில் ஏதேனும் விஷத்தைக் கலந்திருக்கலாம் என்றான்.

அப்போது பாயசம்  மட்டுமே தயாராகி இருந்தது. கள்வர்களின் தலைவன், சரி, இந்த பாயசத்தை இவனுக்குக் கொடுங்கள் இவன் நன்றாக இருந்தால் பிறகு நாம் அருந்து வதைப்பற்றி யோசிப்போம் என்றான்.

தன்னை மன்னன் என வெளிக்காட்ட முடியாமல் மன்னன் தவிக்க, தயாராக இருந்த பாயசத்தை குடித்தே ஆகவேண்டும் என அவர்கள் அடிக்க மன்னனுக்கு பாயசம் பல குவளைகளில் கொடுக்கப்பட, வேறு வழியின்றி திகட்டத் திகட்ட, வயிறு முட்டக் குடித்தான் மன்னன்.

"நான் இதில் எதையும் கலக்கவில்லை நான் ஒரு வழிப்போக்கன், மரத்தில் அமர்ந்து சற்றே இளைப்பாறினேன் என மன்னன் கெஞ்ச மன்னனுக்கு ஒன்றும் ஆகாதது கண்டு, சரி, ஓடிப்போ, என விரட்டினர்.


அரண்மனையில் இருந்திருந்தால் கூட, ஒரே ஒரு வெள்ளி சொம்பால் சிறிதளவு பாயாசம் குடித்திருப்பேன் ஆனால், இங்கு வந்து மிதமிஞ்சிய அளவிற்கு குடித்து விட்டேனே, ஜோசியர் சொன்னது உண்மையே, விதி வலியது தான், என்று உணர்ந்தான் மன்னன்.

~ ரா. பன்னீர்செல்வம்

# மேஷம்



- திருமணம் தடை பட்டவர்களுக்கு திருமண முயற்சி கை கூடும்.
- தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும். தொழிலில் லாபம் அதிகரிக்கும்.
- உங்கள் கடந்த கால முதலீடுகளின் மூலம் நீங்கள் லாபம் பெறுவீர்கள். உங்கள் பணப்புழக்கம் கணிசமாக அதிகரிக்கும்.
- இந்த மாதம் புதிய முதலீடுகள் எதுவும் மேற்கொள்ளதீர்கள்.
- ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும் என்றாலும் சிறு சிறு உடல் உபாதைகள் ஏற்படும் என்பதால் கவனம் தேவை.
- இள வயது அன்பர்கள் இந்த மாதம் தங்கள் காதலை வெளிப்படுத்த ஏற்ற நேரம் ஆகும்.
- உங்கள் வாழ்க்கைத் துணையை வெளியிடங்களுக்கு அழைத்துச் சென்று மகிழ்விப்பதற்கு இந்த மாதம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பெரிய அளவிலான பாதிப்புகள் ஏதும் இருக்காது என்றாலும் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.
- வயிறு சம்பந்தமான உபாதைகள் வருவதற்கு வாய்ப்பு உள்ளது என்பதால் உங்கள் உணவில் கவனம் செலுத்த வேண்டும்.



# ரிஷபம்

- சுயதொழில் செய்யும் ரிஷப ராசி அன்பர்கள் தங்கள் இலக்குகளை அடைய அதிக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
- வேலை செய்யும் ரிஷப ராசி அன்பர்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.
- திருமணத்திற்குக் காத்திருப்பவர்களுக்கு இந்த மாதம் தக்க துணை தேட உகந்த மாதம் ஆகும்.
- திருமணமான தம்பதிகள் இடையே ஒற்றுமை இருக்கும்.
- இந்த மாதம் உங்கள் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். வருமானம் உயரக் காண்பீர்கள்.
- மாணவர்களுக்கு இந்த மாதம் சிறந்த மாதமாக இருக்கும். படிப்பில் நாட்டம் அதிகரிக்கும்.
- உங்கள் ஆரோக்கியத்தில் சிறிது கவனம் தேவை. தினமும் உடற்பயிற்சி செய்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை நீங்கள் பாதுகாத்துக் கொள்ள இயலும்.
- குடும்பத்தில் அமைதி நிலவ நீங்கள் சண்டை மற்றும் வாக்கு வாதத்தை தவிர்க்க வேண்டும்.
- விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் கணவன் மனைவி உறவில் நெருக்கம் அதிகரிக்கும்.
- சொத்து அல்லது உயில் சம்பந்தமான சட்டச் சிக்கல்கள் ஏதேனும் இருந்தால் அவை இந்த மாதம் உங்களுக்கு சாதகமான பலன்களைத் தரும்.



# மிதுனம்

- இந்த மாதம் பணியைப் பொறுத்தவரை இறக்க நிலை  காணப்படும்.
- இளம் வயது மிதுன ராசி அன்பர்கள் தங்களுக்கு காதல் துணை கிடைக்கப் பெறுவார்கள். மனதில் காதல் அரும்பு மலரும்.
- நீங்கள் அனுசரித்துச் செல்வதன்  மூலம் குடும்ப உறவுகள் சீராகவும்  அமைதியாகவும்  இருக்கும்.
- பொருளாதாரத்தைப் பொறுத்தவரை இந்த மாதம் உங்களுக்கு சற்றே அனுகூலமான நிலை இருக்கும்.
- பணப் புழக்கம் மந்தமாக இருக்கும். உங்கள் செலவுகளை குறைத்துக் கொள்ள வேண்டும்.
- சுயதொழில் செய்பவர்கள் சிறந்த தொழில் வாய்ப்புகளைப் பெறுவார்கள். வியாபாரத்தில் வெற்றி கிடைக்கும்.
- உத்யோகத்தைப் பொறுத்தவரை முன்னேற்றத்தில் மந்த நிலை இருக்கும். இது உங்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கும். கடினமாக உழைத்தாலும் அதற்குரிய பலன் கிடைப்பது அரிதாக இருக்கும்.
- இந்த மாதத்தின் பிற்பகுதியில் பண விஷயங்கள் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படும்.
- ஸ்திரமான நிதிநிலை இருக்கும். பெரிய அளவில் நஷ்டங்கள் ஏதும் ஏற்படாது என்பது உங்களுக்கு ஆறுதலான விஷயமாக இருக்கும். உங்கள் சேமிப்பைக் கொண்டு உங்கள் செலவுகளை சமாளித்துக் கொள்வீர்கள்.




# கடகம்

- நிதிநிலையைப் பொறுத்தவரை பண வரவு குறைவாக இருக்கும். பெரிய அளவில் லாபம் எதுவும் இருக்காது.
- திருமணமான தம்பதிகள் தங்கள் வாழ்க்கைத் துணைக்கென நேரம் ஒதுக்க இயலாத காரணத்தால் உறவில் அதிருப்தியும் மகிழ்ச்சியின்மையும் இருக்கும்.
- உங்கள் ஆரோக்கியம் குறித்த செலவுகள் எழும் என்பதால் அதற்கு சிறிது பணத்தை நீங்கள் ஒதுக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.
- வியாபாரம் செய்பவர்கள் தங்கள் விற்பனை அதிகரிக்கக் காண்பார்கள்.
- உத்தியோகத்தில் இருக்கும் கடக ராசி அன்பர்கள் அங்கீகாரம் பெற சிறிது  கடினமாக உழைக்க வேண்டியிருக்கும்.
- மாணவர்கள் படிப்பில் விடா முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
- உங்கள் தாய் வழி உறவினர்களிடம் சில கருத்து வேறுபாடுகள் ஏற்படும்.
- இந்த மாதம் பணப்புழக்கம் சுமாராக இருக்கும். எழுத்துத் துறை, நடிப்புத் துறை மற்றும் கலைத் துறையில் இருப்பவர்கள் சிறந்த வகையில் வருமானம் ஈட்டுவார்கள்.
- வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களும் கணிசமான வருமானம் காண்பார்கள்.
- உங்கள் பொருளாதார நிலை சுமாராக இருக்கும்.
- இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் சீராக இருக்க வாய்ப்பில்லை. எனவே உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.



# சிம்மம்

- குடும்பத்தில் சில சிறு சிறு பிரச்சினைகள் இருந்தாலும் கணவன் மனைவி உறவு சிறப்பாக இருக்கும்.
- வீட்டுத் தேவைக்கான செலவுகள் அதிகரிக்கும். இந்த மாதம் நீங்கள் கடினமான முயற்சிகள் எடுப்பதன் மூலம் உங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ள இயலும்.
- சுயதொழில் மேற்கொள்பவர்கள் பெரிய அளவிலான வாடிக்கையாளர்களைப் பெறுவீர்கள்.
- உத்தியோகத்தில் உள்ளவர்கள் அதிக பணிச் சுமை இருந்த போதிலும் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.
- புதிய பணிகள் மற்றும் பொறுப்புக்கள் உங்களுக்கு வழங்கப்படும். உங்கள் செயல் திறன் பிறரால் பாராட்டப்படும்.
- உயர்கல்வி பயிலும் மாணவர்கள் பொறுமையுடன் கடினமாக உழைத்துப் படித்தால் வெற்றி நிச்சயம்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். அதனை தக்க வைத்துக் கொள்ள நீங்கள் உடற் பயிற்சி மற்றும் தியானம் போன்றவற்றை மேற்கொள்ளுங்கள்.
- உங்கள் வாழ்க்கைத் துணையின் அன்பைப் பெறுவீர்கள். இந்த மாதம் உங்கள் உறவு மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கும்.
- இந்த மாதம் உங்கள் உறவினர்களுடன் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கும் மாதமாக இருக்கும்.
- நிதிநிலையைப் பொறுத்தவரை இந்த மாதம் உங்களுக்கு அதிர்ஷ்டகரமான மாதமாக இருக்கும்.




# கன்னி

- கன்னி ராசி அன்பர்களுக்கு இந்த மாதம் நன்மை தீமை இரண்டும் கலந்த பலன்கள் கிடைக்கும்.
- உத்தியோகத்தில் இருக்கும் மகர ராசி அன்பர்கள் திறம்பட செயலாற்றுவார்கள்.
- குடும்பத்தில் அன்பும் மகிழ்ச்சியும் இருக்கும்.
- குடும்பத்தார் அனைவரிடமும் சுமுகமான உறவு காணப்படும்.
- இந்த மாத இறுதியில் உங்கள் வருமானம் உயரும். பொருளாதார நிலை மேம்படும்.
- சுயதொழில் மற்றும் வியாபாரம் ஸ்திரமான நிலையில் இருக்கும்.
- மாணவர்கள் மனதில் பதட்ட நிலை இருக்கும். மாணவர்கள் அதிக முயற்சியுடனும் கவனமுடனும் படிக்க வேண்டும். ஞாபகத் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
- ஆரோக்கியத்தில் பெரிய அளவிலான பாதிப்புகள் ஏதும் இருக்க வாய்ப்பில்லை என்றாலும் சிறு சிறு உபாதைகள் வந்து போகும். அஜீரணக் கோளாறுகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது எனவே உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.
- உங்கள் மனதில் அன்பு, காதல், பாசம் பொங்கிப் பெருகும் மாதமாக இந்த மாதம் இருக்கும்.
- நீங்கள் உங்கள் துணையையும் அவரின் உணர்வுகளையும் புரிந்து நடந்து கொள்வதன் மூலம் நல்லுறவைப் பேண இயலும்.
- நீங்கள் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த இது ஏற்ற நேரமாக இருக்கும்.



# துலாம்

- துலாம் ராசி அன்பர்களின் தன நிலையில் மேம்பாடு உண்டாகும்.
- நீங்கள் தொழில் செய்பவராக இருந்தால் சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள்.
- கூட்டுத்தொழில் செய்பவர்களின்  வருமானம் அதிகரிக்கும்.
- தொழில் குறித்த முக்கிய முடிவுகளை எடுக்கும் முன்பு அதன் நன்மை தீமைகளை ஆராய்ந்து முடிவு எடுங்கள்.
- இளம் வயது துலாம் ராசி அன்பர்கள் தங்கள் காதல் குறித்து வீட்டில் சில பிரச்சினைகளை சந்திப்பார்கள்.
- திருமணமான தம்பதிகள் இடையே சுமுகமான உறவு இருக்கும்.
- மாணவர்கள் கவனச் சிதறலுக்கு ஆட்படுவார்கள். படிப்பில் கவனம் தேவை.
- உங்கள் ஆரோக்கியத்தில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும்.
- சிறுநீரகம் சம்மந்தப்பட்ட உடல் நல பாதிப்பு ஏற்படலாம். போதுமான நீர் உட்கொண்டு இந்த பாதிப்பில் இருந்து தப்பிக்கலாம்.
- திருமணமான தம்பதிகளின் தாம்பத்திய வாழ்வு சிறக்கும். கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை நிலவும். அன்னியோன்யம் பெருகும்.
- உறவினர்கள், நண்பர்கள் என அனைவரிடமும் நல்ல சுமுகமான உறவு நிலை இருக்கும். இது தங்களின்களின் மன மகிழ்ச்சியை கூட்டும்.
- இந்த மாதம் உங்கள் பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும்.
- உங்கள் அன்றாடத் தேவைகளை நீங்கள் எளிதாக  சமாளிப்பீர்கள். பணத்தை எதிர்கால நலன் கருதி சேமிப்பீர்கள்.




# விருச்சிகம்

- குடும்பத்தில் அமைதியும் நல்லிணக்கமும் இருக்கும்.
- பொருளாதார நிலையைப் பொறுத்தவரை இந்த மாதம் உங்களுக்கு சில அனுகூலங்கள் இருக்கும்.
- சுயதொழில் செய்பவர்கள் தங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ள புதிய தொழிலைத் தொடங்குவார்கள்.
- நீங்கள் ஆன்மீக விஷயங்களுக்காகவும் பணத்தை செலவு செய்வீர்கள்.
- உயர்கல்வி பயிலும் மாணவர்கள் கவனச் சிதறல் போன்ற தடைகளையும் தாண்டி கல்வியில் முன்னேறுவார்கள். பல புதிய விஷயங்களை கற்றுக் கொள்வார்கள்.
- தங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.
- வயதானவர்களின் உடல் நிலையில் சிறிது கவனமாக தேவை. திருமண முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.
- அரசு பணியில் இருப்பவர்களுக்கு இந்த மாதம் சிறப்பாக இருக்கும். தன்னுடன் பணிபுரிபவர்களிடம் சுமூகமான உறவு ஏற்படும்.
- உங்கள் திறமை மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்களுக்கு பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.
- காதலர்கள் தங்கள் துணையின் மூலம் சில பிரச்சினைகளை சந்திப்பீர்கள். காதல் உறவில் கவனம் தேவை.
- திருமணமான தம்பதிகள் தங்களின் மனதை சந்தோசமாக வைத்திருக்க குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு செல்ல விரும்புவீர்கள்.



# தனுசு

- தனுசு ராசி அன்பர்களுக்கு இந்த மாதம் சிறந்த மாதமாக இருக்கும்.
- குடும்பத்திலும் மற்றும் அலுவலகத்திலும் நீங்கள் சாதகமான விஷயங்களை எதிர்பார்க்கலாம்.
- தங்களின் உத்தியோகத்தில் சாதனைகளைப் புரிவதற்கும் வாய்ப்பு உள்ளது.
- பணியிடத்தில் நீங்கள் நல்ல பெயர் பெறுவீர்கள். பணியிடச் சூழல் உங்களுக்கு அனுகூலமாக இருக்கும் புதிய நண்பர்கள் கிடைப்பார்கள்.
- புதிய நண்பர்கள் மூலம் உங்களுக்கு தன உதவி கிடைக்கும். தங்களின் பொருளாதார நிலையும் சிறப்பாக இருக்கும்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.
- தனுசு ராசியினருக்கு இந்த மாதம் காதல் உறவு இனிமையாக இருக்கும்.
- சிலருக்கு மனதில் புதிய காதல் மலரும்.
- திருமணமான தம்பதியர் மனமொத்து வாழ்வார்கள். இருவருக்கும் இடையே அன்னியோன்யம் கூடும்.
- உங்கள் பொருளாதார நிலை ஏற்றம் காணும் வகையில் கிரக நிலைகள் உள்ளன.
- பங்கு வத்தக நிறுவனங்களில் முதலீடு செய்வதர்க்கும் லாபங்களை ஈட்டுவதற்கும் இந்த மாதம் ஏற்றதாக உள்ளது.




# மகரம்

- இந்த மாதம் தங்களின் பொருளாதாரம், வேலை, என அனைத்து அம்சங்களிலும் முன்னேற்றம் பெற உகந்த மாதமாகும்.
- வேலை தேடிகொண்டிருப்பவர்களுக்கு புதிய வாய்ப்புகளை கொடுக்கும் மிகவும் உன்னதமான மாதமாக இந்த மாதம் அமைகிறது.
- குடும்ப உறவுகள் சிறப்பாக இருக்கும். உங்கள் வாழ்க்கைத் துணைக்கென நேரம் ஒதுக்கி அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.
- தொழிலில் போட்டிகளை சந்திப்பீர்கள். முதலீடுகளை மேற்கொள்ளும் போது கவனம் தேவை.
- எதிர் கால நலன் கருதி உங்கள் செலவுகளை குறைத்துக் கொண்டு சேமிப்பை அதிகரித்துக் கொள்ளுவது நன்மை பயக்கும்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும் என்றாலும் உணவு கட்டுப்பாடு விசையத்தில் கவனம் செலுத்த வேண்டும்.
- மாணவர்கள் கடுமையாக உழைத்துப் படிக்க வேண்டும்.
- காதல் மற்றும் திருமண உறவில் சிறிய விஷயங்களுக்கெல்லாம் கருத்து வேறுபாடுகள் ஏற்படும். எனவே வாழ்க்கைத் துணையிடத்தில் வாக்கு வாதங்களை மேற்கொள்ளாமலிருப்பது நன்மை பயக்கும்.



# கும்பம்

- கும்ப ராசி அன்பர்களுக்கு பணியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருக்கும் என்றாலும் நீங்கள் சில சவால்களையும் சந்திக்க நேரும்.
- உங்கள் குடும்ப உறவுகளின் அன்பைப் பெற நீங்கள் சுயநலமின்றி செயல்படுவது நன்மை பயக்கும்.
- உங்கள் ஆரோக்கியத்தில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். மனம் சோர்வுடன் காணப்படும். உடற்பயிற்சி மற்றும் தியானம் மூலம் உடல் நலம் மற்றும் மனநலம் புத்துணச்சி அடையும். இந்தமாதம் தங்களின் பொருளாதார நிலையில் சற்று இறக்கம் காணப்படும்.
- வீட்டிலும் அலுவலகத்திலும் மூத்தவர்களின் ஆலோசனை கேட்டு அதன்படி நடந்து கொள்ளுவது நன்மை பயக்கும்.
- மாணவர்கள் விடா முயற்சியினால் படிப்பில் வெற்றிக்கொடி கட்டமுடியும்.
- திருமணத்திற்குக் காத்திருப்பவர்கள் இந்த மாதம் மனதிற்குப் பிடித்த தக்க துணையைக் கண்டு கொள்வார்கள்.
- திருமணமான தம்பதிகளுக்கு இந்த மாதம் அனுகூலமான மாதமாக இருக்கும். நீங்கள் இருவரும் கருத்தொருமித்து வாழ்வீர்கள்.
- இந்த மாதம் நீங்கள் பணப்பற்றாக்குறையை சந்திப்பீர்கள். செலவுகள் அதிகமாக இருக்கும்.



# மீனம்

- குடும்பத்தில் உள்ளவர்களிடம் மதிப்பும் மரியாதையும் கூடும்.
- வாழ்க்கைத் துணை மற்றும் அவர்கள் வீட்டாரிடம் கருத்து வேறுபாடு ஏற்படும். வாக்குவாத்தை தவிர்பது நன்மை பயக்கும்.
- இந்த மாதம் குரு பகவான் மற்றும்  சனி பகவான் உங்களுக்கு தொழில் ரீதியான முன்னேற்றத்தை அளிப்பார்கள்.
- உறவினர்களிடம் பண விஷயம் அல்லது பூர்வீக சொத்து சம்பந்தமான கருத்து வேறுபாடு  ஏற்படும். உறவில் நல்லிணக்கம் காண நீங்கள் கடின முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். எனவே நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் நீங்கள் உறவில் அமைதியை தக்க வைத்துக் கொள்ள இயலும்.
- இந்த மாதம் உங்கள் நிதிநிலையில் ஏற்ற இறக்கம் இருக்கும். உங்கள் மனைவி மற்றும் அவர் வழி உறவினர்களுக்காக  செலவுகள் ஏற்படும்.
- தங்களின் செலவுகளை கட்டுப்படுத்தி சேமிப்பை அதிகரிக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
- உத்தியோகத்தில் இருக்கும் மீன ராசி அன்பர்கள் சுமாரான பலன்களை எதிர்பார்க்கலாம். தங்களின் கடின உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்காமல் போகலாம். சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. வீண் வக்குவாத்தை தவிர்பது நன்மை பயக்கும்.
- கூட்டுத் தொழில் உங்களுக்கு லாபத்தை அளிக்கும்.
- தொழில் ஒப்பந்தம் சார்ந்த ஆவணங்களில் கையொப்பமிடுமுன் கவனம் தேவை.
- வெளிநாட்டு தொழில் வாய்ப்புகள் உங்களை நாடி வரும். அதன் மூலம் நீங்கள் ஆதாயமும் வெற்றியும் பெறுவீர்கள்.

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

அனைத்து ஜோதிட, புரோஹித மற்றும் ஆன்மிக சேவைகளுக்கு
தொடர்புகொள்ள: **95660 00134**